# ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
# ஊடக அமைச்சு
# MINISTRY OF MASS MEDIA

163, ඇසිදිසි මැදුර, කිරුළපන මාවත, පොල්හේන්ගොඩ, කොළඹ 05
163, அசிதிசி மெதுர, கிருளப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு - 05
163, Asidisi Medura, Kirulapone Mawatha, Polhengoda, Colombo 05


| මගේ අංකය எனது இல. | ඔබේ අංකය உமது இல. Your No. | දිනය திகதி Date |
|---|---|---|
| MM/RTI/Rtiday/2019/1 | | 2019.09.24 |

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,

அனைத்து மாகாணங்களினதும் பிரதம செயலாளர்கள்,

அனைத்து மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,

அனைத்து திணைக்களத் தலைவர்கள்,

அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,

அனைத்து பிரதேச செயலாளர்கள்.

**2019 செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை தகவல் மாதத்தை பிரகடனம் செய்தல் மற்றும் கொண்டாடுதல்**

தகவல் அறியும் உரிமை உலகம் பூராகவும் நடைமுறைக்கு வந்ததன் விளைவாக யுனெஸ்கோ அமைப்பினால் 2015 நவம்பர் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 38C/70 பிரேரணையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 28 ஆம் திகதி தகவல் அறியும் உலகலாவிய பிரவேசத்திற்கான சர்வதேச தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

2. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் 14அ மூலம் தகவல் அறியும் உரிமை பிரஜைகளின் அடிப்படை உரிமையாக சட்டமாக்கப்பட்டுள்ளது. அந்த உரிமையை அமுல்படுத்தும் நோக்கில் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2016 ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டதோடு, தகவல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயலூக்கத்துடன் அமுலாக்கம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவது வெகுசன ஊடக அமைச்சின் பொறுப்பாகும்.

3. அதற்கிணங்க, இம்முறை செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச தகவல் அறியும் உரிமைத் தினத்தையொட்டி செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியை தகவல் மாதமாக பிரகடனம் செய்வதற்கு வெகுசன ஊடக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தத் தகவல் மாதத்தில் பிரஜைகளை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட தகவல் சட்டத்திற்கு ஏற்புடைய செயற்பாடுகள் பல நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. 2019.09.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

4. எனவே, பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி தகவல் மாதத்தில் (செப் 15 – ஒக் 15) தகவல் அறியும் உரிமையை கொண்டாடும் பொருட்டு தங்களது நிறுவனத்தில் மற்றும் இணைந்த நிறுவனங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

(அ) தகவல் மாதத்தில் வசதியான ஒரு நாளில் நிறுவனத்தின் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி மூலம் தகவலை அறிந்துகொள்வது பிரஜைகளின் அடிப்படை உரிமை, தகவல் அறியும் சட்டத்தின் முக்கியத்துவம், தகவல் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கும் போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள், முன்னேற்றகரமான தகவல்களை வழங்குதல் மற்றும் சட்டத்திற்கு அமைய தகவல்களை பாதுகாக்கும் கட்டளைகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய விடயங்களை அறிவூட்டி 20 நிமிடங்களுக்கு சிற்றுரை ஒன்றை நடாத்துதல்.


| ලේකම් செயலாளர் Secretary | කාර්යාලය அலுவலகம் Office | ෆැක්ස් தொலைநகல் Fax | වෙබ් අඩවිය සහ ඊ-මේල් ලිපිනය இணையம், ஈ-மெயில் Website and E-mail Address |
|---|---|---|---|
| (+94)-11-2513467 | (+94)-11-2513491 (+94)-11-2512321 | (+94)-11-2513458 | www.media.gov.lk info@media.gov.lk |

(ஆ) வெகுசன ஊடக அமைச்சினால் நாடு பூராகவும் ஒழுங்குசெய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைச்சின் வேண்டுகோளின் பேரில் தேவையான முனைப்பான ஒத்துழைப்பை வழங்குதல்.

(இ) தகவல் மாதத்தில் நிறுவனத்திற்கு வருகைத்தரும் பிரஜைகளை அறிவூட்டும் முறைமைகளை அடையாளம் கண்டு செயற்படுத்தல்.

(ஈ) நிறுவனத்தில் தகவல் உத்தியோகத்தர் மற்றும் பெயரிடப்பட்ட உத்தியோகத்தரின் தகவல்கள் அடங்கிய பெயர் பலகையை (சட்டத்தின் 26(1) பிரகாரம்) நிறுவன வளாகத்தில் பொதுமக்களுக்கு சிறந்த முறையில் காணும் இடமொன்றில் நிறுவுவதற்கும் நிறுவனத்தின் மற்றும் இணை நிறுவனங்களின் முன்னேற்றகரமான தகவல்களை நாளதுவரைப்படுத்தி பிரகடனம் செய்வதற்கும் சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகள் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு பொது அதிகாரசபைக்கு உள்ள கடமைப்பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

5. இந்தப் பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மிக உயர்வாகக் கருதுகின்றேன்.

சுனில் சமரவீர

செயலாளர்

வெகுசன ஊடக அமைச்சு

பிரதிகள்

1. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம் - தயவுகூர்ந்து தகவலுக்காக

2. செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக

3. செயலாளர்,அரசாங்க நிர்வாக,அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு - தயவுகூர்ந்து தகவலுக்காக